K.

# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

**ந.க. எண். 76862 / எம் / இ4 / 2012, நாள் : 22.06.2012**

பொருள் : பள்ளிக் கல்வி – பள்ளிகளில் சதுரங்க விளையாட்டினை நடைமுறைப்படுத்துதல் – மாவட்ட அளவில் – ஒன்றிய அளவில் பயிற்சி அளிக்க தெரிவித்தல் – சார்ந்து.

பார்வை : இவ்வலுவலக செயல்முறைகள் ந.க. எண். 76862/எம்/இ4 நாள் 12.06.2012.

*****

பார்வையில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளின் தொடர்ச்சியாக தமிழகத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் சதுரங்க விளையாட்டினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாவட்ட அளவில் மற்றும் ஒன்றிய அளவிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நடத்தப்படவுள்ளது.

தற்போது பயிற்சி பெறும் மாநில அளவிலான கருத்தாளர்கள் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களை நேரில் அணுகி அவர்களது ஆலோசனையின்படி மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களை கணக்கிட்டு ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கேற்ப நான்கு பயிற்சியாளர்களை ஒன்றிய அளவில் தெரிவு செய்து மாவட்ட அளவிலான கருத்தாளர் பயிற்சி கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அளிக்கப்படல் வேண்டும்.

**மாவட்ட அளவிலான பயிற்சி**

| வ. எண். | பள்ளியின் வகை | பயிற்சியில் கலந்து கொள்வோர் விவரம் | எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|---|
| 1. | தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் / விருப்பமுள்ள ஆசிரியர் | ஒன்றியத்திற்கு 4 பேர் வீதம் | 5.7.2012 மற்றும் 6.7.2012 |

மேற்குறிப்பிட்டுள்ள மாவட்ட அளவில் பயிற்சி பெற்ற கருத்தாளர்கள் ஒன்றியங்களில் உள்ள உடற்கல்வி ஆசிரியர் / விருப்பமுள்ள ஆசிரியர் ஒன்றிய அளவில் பயிற்சியளிக்க தெரிவிக்கப்பட வேண்டும். இது இறுதிகட்ட பயிற்சியானதால் ஆசிரியர் எவரும் விடுபடாமல் அனைவருக்கும் பயிற்சியளிக்கப்படல் வேண்டும் (தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்).

**ஒன்றிய அளவிலான பயிற்சி**

| வ. எண். | பள்ளியின் வகை | பயிற்சியில் கலந்து கொள்வோர் விவரம் | எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|---|
| 1. | தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் / விருப்பமுள்ள ஆசிரியர் | ஒன்றியத்திற்கு 4 பேர் வீதம் | 16.7.2012 மற்றும் 17.7.2012 |

மேலும் மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பின் அதற்கேற்றவாறு இரு கட்ட பயிற்சியாகவோ அல்லது மூன்று கட்ட பயிற்சியாகவோ நடத்த தெரிவிக்கப்படுகிறது.

www.TeacherTN.com

1158

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு வாரத்திற்கு இரு பாட வேளைகள் உடற்கல்விக்கென ஒதுக்கீடு செய்து அந்நேரத்தில் சதுரங்க விளையாட்டிற்கான பயிற்சியளிக்க வேண்டும்.

அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலை பள்ளி மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டுப் பயிற்சியினை உடற்கல்வி பாட வேளைகளிலும் மற்றும் மாலை நேரங்களிலும் பள்ளிகளில் பயிற்சி அளித்தல் வேண்டுமென பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மேற்கண்ட பயிற்சிக்கான அட்டவணையினை தயாரித்து, பயிற்சி அளிப்பதற்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்தும் இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களுக்கு **29.06.2012–க்குள்** அனுப்பப்பட வேண்டும் எனவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக 3/3
சென்னை – **600 006.**

22/6/12

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல் :–
1. முதன்மை செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9
   அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2. உறுப்பினர்–செயலர்
   தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
   நேரு பூங்கா, சென்னை–84
   தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
3. தொடக்கக் கல்வி இயக்குநர்,
   டி.பி.ஐ. வளாகம், சென்னை – 6 அவர்களுக்கு
   தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

ந.க. எண் 007436 / ஜெ2 / 2012 நாள் . 06/2012

இதன் நகல் தக்க நடவடிக்கைக்காக அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்படுகிறது.

ஒப்பம் தொடக்கக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அ. மா. தொ. க. அலுவலர்கள்

22/6

www.TeacherTN.com